‘ஆசிய உலகத்திறன் தைபே 2025’ போட்டி! பதக்கங்கள் வென்ற - பங்கேற்ற

தமிழ்நாட்டைச் சேர்ந்த இளைஞர்களுக்கு ஊக்கத் தொகை!

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் – காசோலைகள் வழங்கிப் பாராட்டினார்!

சென்னை, டிச.10-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால், TN SKILLS 2023 போட்டிகள் 2023-ஆம் ஆண்டு மே 5 அன்று தொடங்கப்பட்டது. உலகத் திறன் போட்டிகள் (World Skills Competition) பட்டியலிலுள்ள அனைத்து திறன் போட்டிகளிலும் கலந்து கொள்ள தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு போட்டி உணர்வை ஊக்குவிப்பது, மாணவர்களிடம் உள்ள திறமைகளை கண்டறிந்து வளர்ப்பது மற்றும் கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களுக்காக பல்வேறு திறன் போட்டிகள் மற்றும் ஹேக்கத்தான் நிகழ்வுகளை நடத்துவதன் மூலம், அவர்களின் திறமைகளை உலகளாவிய அளவில் வெளிப்படுத்துவதற்கான தளத்தை வழங்குவதே TN SKILLS 2023 போட்டியின் நோக்கம் ஆகும்.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் (TNSDC) நான் முதல்வன் திட்டத்தின் மூலம் பயிற்சி பெற்று, தமிழ்நாடு திறன் போட்டி (TNSkill Competition) உள்ளிட்ட மாநிலத் திறன் போட்டிகளில் வெற்றி பெற்ற தமிழ்நாட்டு இளைஞர்கள் இந்தியாவைத் தாண்டி உலக அரங்கில் மிளிரும் திறனை வெளிப்படுத்தி வருகின்றனர்.

தமிழ்நாடு முன்னேற்றம்!

இந்தியத் திறன் போட்டிகள் 2024-இல் மற்ற எந்தவொரு மாநிலத்தையும் விட அதிகமான அளவில் தமிழ்நாட்டிலிருந்து 87 பேர் பங்கேற்றனர். இந்த போட்டியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த போட்டியாளர்கள் 6 தங்கம், 8 வெள்ளி, 9 வெண்கலம் மற்றும் 17 மெடலியன் ஆஃப் எக்ஸலன்ஸ் (Medallion of Excellence) என மொத்தம் 40 பதக்கங்களைப் பெற்று தமிழ்நாட்டின் திறமையை வெளிப்படுத்தினர். இதன் காரணமாக 2021 இந்திய திறன் போட்டிகளில் 10-ஆம் இடத்தை பெற்ற தமிழ்நாடு 2024-இல் 3-ஆம் இடத்துக்கு முன்னேறியது.

பிரான்ஸ் நாட்டின் லியோன் நகரில் நடைபெற்ற 47 வது உலக திறன் போட்டி 2024 ல் தமிழ்நாட்டிலிருந்து 3 போட்டியாளர்கள் பங்கேற்றனர்.

2025 நவம்பர் 27 முதல் 29 வரை தைவானின் தைபே நகரில் உள்ள நாங்காங் கண்காட்சி மையத்தில் நடைபெற்ற ஆசிய உலகத்திறன் தைபே 2025-ல் (WorldSkills Asia Taipei 2025) 29 நாடுகளில் இருந்து 500-க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்து கொண்டனர்.

‘ஆசிய உலகத்திறன் தைபே 2025’ திறன் போட்டியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 3 போட்டியாளர்கள் உள்பட இந்தியா முழுவதும் இருந்து 23 போட்டியாளர்கள் பங்கேற்றனர். பல்வேறு பிரிவுகளில் நடைபெற்ற இந்தப் போட்டியில் இந்தியா 1 வெள்ளிப்பதக்கம், 2 வெண்கலப் பதக்கங்கள் மற்றும் 3 Medal of Excellence என மொத்தம் 6 பதக்கங்களை வென்று 8 வது இடத்தைப் பிடித்தது.

தமிழ்நாட்டின் விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த இரா.தினேஷ் Robot System Integration திறன் பிரிவில் வென்ற வெண்கலப் பதக்கம் மற்றும் கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. பூ.ர.முகமது மஃபாஸ் Software Application Development பிரிவில் வென்ற Medal for Excellence ஆகிய 2 பதங்கங்களும் இந்தியா வென்ற 6 பதக்கங்களில் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

இப்போட்டியில் ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த சுரேந்திரன் - Plastering & Dry Wall Systems திறன் பிரிவில் பங்கேற்று இந்தியாவை பிரதிநிதித்துவப் படுத்தினார். இவர் 2024 இந்திய திறன் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்றவராவார்.

(இரா.தினேஷ் இந்திய திறன் போட்டி 2021-ல் வெண்கலப்பதக்கம் மற்றும் 2024-ல் வெள்ளிப்பதக்கமும் வென்றவர். பூ.ர.முகமது மஃபாஸ் இந்திய திறன் போட்டியில் 2024-ல் வெள்ளிப்பதக்கம் வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்).

நேற்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆசிய உலகத்திறன் தைபே 2025 (WorldSkills Asia Taipei 2025) போட்டியில் - Robot System Integration திறன் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த இரா.தினேஷ் இராமசாமிக்கு 5 லட்சம் ரூபாய்க்கான காசோலையையும், Software Application Development திறன் பிரிவில் Medal for Excellence வென்ற கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த பூ.ர.முகமது மஃபாஸ்க்கு 3 லட்சம் ரூபாய்க்கான காசோலையும், Plastering & Dry Wall Systems திறன் பிரிவில்இந்தியாவைபிரதிநிதித்துவப்படுத்தி பங்கேற்றதற்காக ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த ம.சுரேந்திரனுக்கு 2 லட்சம் ரூபாய்க்கான காசோலையும் வழங்கிப் பாராட்டினார்.

இந்நிகழ்ச்சியில் சிறப்புத்திட்ட செயலாக்கத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் கிரந்தி குமார் பாடி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் இரா.கி.பேட்டை கிழக்கு ஒன்றிய திமுக அலுவலகம் திறப்பு விழா ஒன்றிய செயலாளர் பா.சம்பத் தலைமையில் நடைபெற்றது. இதனை மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ திறந்து வைத்தார். உடன் மா.இரகு, கே.எம். சுப்பிரமணி, மா.கிரண், ஜி சித்திக் அலி, நாகப்பன், ஏ.கே. திருவேங்கடம், டில்லி பாபு, வெங்கடேஷ், நவீன், எஸ்.மாத்தையா, சதீஷ், திருநாவுக்கரசு, உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

ஒன்றிய அரசு பாரபட்சம் காட்டாமல் தமிழ்நாட்டுக்கு வழங்க வேண்டிய

மாற்றுத்திறனாளிகளின் மறுவாழ்வு நிதியை உடனே விடுவித்திடுக!

நாடாளுமன்றத்தில் ஈரோடு கே.இ.பிரகாஷ் வலியுறுத்தல்!

புதுடெல்லி, டிச.10-

மாற்றுத்திறனாளிகள் மறுவாழ்வு நிதியை மாநிலங்களுக்கு ஒதுக்குவதில் பாரபட்சம், மீண்டும் மீண்டும் வேலையைக் காட்டும் ஒன்றிய அரசு எனவும் பாரபட்சத்தை நிறுத்திக் கொள்வதுடன், நிதியைஉடனடியாக விடுவிக்க வேண்டுமெனவும் கே.இ.பிரகாஷ் எம்.பி. வலியுறுத்தினார்.

மாற்றுத்திறனாளிகள் மறுவாழ்விற்கான தீன்தயாள் நிதி முழுமையாக செலவு செய்யப்படவில்லை என்று நாடாளுமன்ற குழு தெரிவித்த கருத்துகளை சுட்டிக் காட்டி, உண்மையான தரவுகளைக் கேட்டு, ஒன்றிய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறையிடம் நாடாளுமன்றத்தில் ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி எழுப்பினார்.

இதற்கு அதன் அமைச்சர் அளித்துள்ள பதில், ஒன்றிய அரசு அந்த நிதியைபல்வேறு மாநிலங்களுக்கு, குறிப்பாக தமிழ்நாட்டிற்கு முறையாக ஒதுக்கவில்லைஎன்பது வெளிப்பட்டுள்ளது. தமிழ்நாட்டுடன் ஒப்பிடக்கூடிய மற்ற மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியைவைத்துப் பார்த்தால், 10 மடங்கு நிதி நமக்கு குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இது தமிழ்நாட்டு மாற்றுத்திறனாளிகளுக்கு ஒன்றிய அரசு இழைத்து வரும் ஈவு இரக்கமற்ற துரோகம்.

நாடாளுமன்றக் குழுவின் குற்றச்சாட்டை திட்டமிட்டு மறைக்கும் ஒன்றிய அரசு:

தீன்தயாள் நிதியை முழுமையாகச் செலவு செய்யாதது மற்றும் பயனாளர்களின் எண்ணிக்கைகுறைக்கப்பட்டிருப்பது ஆகியவற்றை நாடாளுமன்றக் குழு கடுமையாகக் கண்டித்ததா என்ற எனது கேள்விக்கு, ஒன்றிய அமைச்சர் நேரடியான பதில் அளிக்காமல் தவிர்த்திருக்கிறார். “மொத்தச் செலவினம் அதிகரித்துள்ளது” என்று கண்துடைப்பாக ஒரு அட்டவணையைமட்டும் சமர்ப்பித்திருக்கிறார்.

நிதிப் பயன்பாடு குறித்த உண்மையான காரணத்தைமறைப்பதும், பயனாளர்கள் குறைப்பை ஏற்க மறுப்பதும் ஒன்றிய அரசின் நிர்வாகத் திறமையின்மைமற்றும் அடிப்படைநேர்மையின்மையை பட்டவர்த்தனமாகப் பிரதிபலிக்கிறது.

தமிழ்நாட்டிற்கு எதிராக தொடரும் நிதிப் பாரபட்சம்:

தீன்தயாள் நிதி என்பது 100% ஒன்றிய அரசின் நிதி. திட்ட முன்மொழிவுகளை (Project Proposals) மாநிலம் பரிந்துரைத்தாலும், இறுதி ஒப்புதல் மற்றும் நிதி விடுவிப்பைசெய்ய வேண்டியது ஒன்றிய அரசே. இந்த நிலையில், கடந்த 5 ஆண்டுகளின் தரவுகளைஒப்பிடும் போது, தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்ட நிதி மற்றும் திட்ட ஒப்புதல்கள் மிகமிகக் குறைவாக உள்ளன.

உதாரணத்திற்கு, 2024 25 நிதியாண்டை எடுத்துக்கொண்டால், தமிழ்நாட்டிற்கு 11 திட்டங்களுக்கு மட்டுமேஒப்புதலும், 2.60 கோடி நிதியும் மட்டுமேஒன்றிய அரசு வழங்கியிருக்கிறது. அதுவே, உத்தரப் பிரதேசத்திற்கு 43 திட்டங்களுக்கு, 18.96 கோடியும், ஆந்திரப் பிரதேசத்திற்கு 73 திட்டங்களுக்கு 26.50 கோடியும் தாராளமாக வழங்கியுள்ளது.

தமிழ்நாடு, மாற்றுத்திறனாளிகள் நலனில் பெரிதும் அக்கறைகொண்ட, அதற்காக சிறப்பான நிறுவனங்களையும், உள்கட்டமைப்பையும் பேணி வரும் மாநிலம் என்பது நிரூபிக்கப்பட்ட உண்மை. இப்படிப்பட்ட தமிழ்நாட்டிற்கு குறைவான திட்டங்களுக்கு மட்டுமே ஒப்புதல் அளிப்பதும், மிகச்சொற்ப நிதியை மட்டுமேஒதுக்குவதும் திட்டமிட்ட சதிச்செயல். இது மாற்றுத்திறனாளிகளுக்கு ஒன்றிய அரசு இழைத்திருக்கும் துரோகம்.

தமிழ்நாட்டில் இருந்து முன்மொழியப்பட்ட திட்டங்கள் நிராகரிக்கப்பட்டதா அல்லது ஒன்றிய அரசு தாமதித்ததா என்பதைகுறிப்பிடாமல் ஒன்றிய அமைச்சர் மழுப்பியிருப்பதே, அவர்களின் துரோகத்திற்கான வெளிப்படைஆதாரம்.

தீன்தயாள் நிதியை முழுமையாகப் பயன்படுத்தாததற்கும், பயனாளர்களைகுறைத்ததற்கும் பொறுப்பானவர்கள் மீது ஒன்றிய சமூக நீதித்துறைதக்க நடவடிக்கைஎடுக்க வேண்டும். இந்த நிதி மட்டுமல்லாமல், பொதுவாகவேபல் வேறு திட்டங்களின் நிதி ஒதுக்கீட்டில் மாநிலங்களுக்கு இடையேகாட்டும் பாரபட்சத்தைநிறுத்திக் கொண்டு, நியாயயமான நிதிப்பகிர்வைஉறுதி செய்ய வேண்டும். மேலும், தமிழ்நாட்டிற்கு கிடைக்க வேண்டிய தீன்தயாள் நிதி உட்பட அனைத்து நிதியையும், உடனடியாக விடுவிக்க வேண்டும்.

இவ்வாறு கே.இ. பிரகாஷ் வலியுறுத்தியுள்ளார்.

கோவை மாவட்டம், உக்கடம்

வரசித்தி விநாயகர் கோயிலுக்குச் சொந்தமான ரூ.100 கோடி சொத்துகள் மீட்பு!

இந்து சமய அறநிலையத்துறை துரித நடவடிக்கை!

கோவை, டிச.10-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவுறுத்தலின்படியும், இந்து சமய அறநிலையத்துறையின்பகட்டுப்பாட்டிலுள்ளதிருக்கோயில்களுக்குச்சொந்தமான சொத்துக்கள் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

அந்த வகையில் நேற்று (08.12.2025) கோயம்புத்தூர் மாவட்டம், உக்கடம், அருள்மிகு வரசித்தி விநாயகர் திருக்கோயிலுக்கு சொந்தமான ரூ.100 கோடி மதிப்பிலான சொத்துகள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டு திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மாவட்டம், உக்கடம், ஒப்பணக்கார வீதியில் அமைந்துள்ள அருள்மிகு இலட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு வரசித்தி விநாயகர் திருக்கோயிலுக்குச் சொந்தமான 80 சென்ட் நிலத்தில் 4 குடியிருப்புகள் மற்றும் 18 வணிக கடைகளை அமைத்து ஆக்கிரமிப்பு செய்திருந்தனர். திருக்கோயிலுக்கு சொந்தமான நிலத்தில் சட்டவிரோதமாக ஆக்கிரமிப்பு செய்திருந்தவர்களை வெளியேற்றிட கோவை மண்டல இணை ஆணையர் அவர்களால் 2015 ஆம் ஆண்டில் சட்டப்பிரிவு 78ன்படி ஆக்கிரமிப்பினை அகற்றிட உத்தரவிடப்பட்டது.

இந்நிலையில் ஆக்கிரமிப்பாளர்கள் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் மற்றும் துறையின் செயலாளர் ஆகியோரிடம் செய்திருந்த மேல்முறையீடுகளும் தள்ளுபடி செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டில் ஆக்கிரமிப்பாளர் திரு. சரவணமூர்த்தி மற்றும் சிலர், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இவ்வழக்கை நடத்த மனுதாரர்கள் முன்வராததால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் இவ்வழக்கினை தள்ளுபடி செய்து, திருக்கோயில் நிர்வாகம் ஆக்கிரமிப்பை அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டது.

அதனைத் தொடர்ந்து இந்து சமய அறநிலையத்துறை சட்டப்பிரிவு 78 மற்றும் 79ன் கீழ் தொடரப்பட்ட வழக்கு மற்றும் உயர்நீதிமன்ற பேராணை உத்தரவுகளின்படி, கோவை மண்டல இணை ஆணையர் பெ.ரமேஷ் அவர்களின் உத்தரவின்படி, உதவி ஆணையர்கள் உ.ச.கைலாஷமூர்த்தி மற்றும் திருமதி.மு.இரத்தினாம்பாள் ஆகியோர் முன்னிலையில் காவல் துறை உதவியுடன் திருக்கோயிலுக்கு சொந்தமான 80 சென்ட் நிலம் ஆக்கிரமிப்பிலிருந்து அகற்றப்பட்டு திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டது. இதன் தற்போதைய சந்தை மதிப்பு ரூ. 100 கோடியாகும்.

இதுவரை இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள 1,063 திருக்கோயில்களுக்கு சொந்தமான ரூ.8,230.55 கோடி மதிப்பிலான 8,024.43 ஏக்கர் திருக்கோயில் சொத்துகள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வின் போது, இந்து சமய அறநிலையத்துறை துணை ஆணையர்கள் திருமதி.ரா.விஜய லட்சுமி, ரா.செந்தில்குமார், காவல்துறை துணை ஆணையர் கார்த்திகேயன், உதவி ஆணையர் முருகேசன், தனி வட்டாட்சியர் (ஆலய நிலங்கள்) திருமதி.பரமேஸ்வரி, செயல் அலுவலர், ஆய்வாளர்கள் மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் உடனிருந்தனர்.

சென்னை தென்மேற்கு மாவட்டம்

மகளிர் அணி - மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

பானு சலீம் – கே.மோனிஷா அறிவிப்பு!

சென்னை, டிச. 10-

சென்னை தென்மேற்கு மாவட்டம் மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் இன்று நடைபெறுகிறது.

இது குறித்து மகளிரணி அமைப்பாளர் பானுசலீம் மற்றும் மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் கே.மோனிஷா ஆகியோரின் அறிவிப்பு வருமாறு:

சென்னை தென்மேற்கு மாவட்டம் மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி ஆலோசனைக் கூட்டம். (10.12.2025) புதன்கிழமை இன்று மாலை 6.00 மணியளவில் சி.பி.ராமசாமி சாலையில் உள்ள அலுவலகத்தில் மயிலை கிழக்கு பகுதிச்செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., எஸ்..முரளி, மயிலை மேற்கு பகுதிச்செயலாளர் நந்தனம்மதி, கே.ஏழுமலை ஆகியோர் முன்னிலையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை. த. வேலு ஆலோசனை வழங்குகிறார்.

கூட்டத்தில் மகளிர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள், மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர்கள், பகுதி மகளிர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் பகுதி மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் கலந்துகொள்ளுமாறு மகளிரணி அமைப்பாளர் பானு சலீம் மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் கே.மோனிஷா அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : கழக ஆக்க பணிகள் குறித்து.

இவ்வாறு அவர்கள் அறிவித்துள்ளனர்.

சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின் கீழ் ரூ.32.62 கோடி மதிப்பில்

விக்டோரியா பொது அரங்கில் புனரமைப்புப் பணிகள்!

மேயர் பிரியா ஆய்வு மேற்கொண்டார்!

சென்னை, டிச.10-

சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின் கீழ் ரூ.32.62 கோடி மதிப்பில் தொன்மை மாறாமல் புனரமைக்கப்பட்டுள்ள விக்டோரியா பொது அரங்கத்தினை மேயர் திருமதி ஆர். பிரியா நேற்று (09.12.2025) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

விக்டோரியா பொது அரங்கம் சென்னையில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க கட்டடமாக திகழ்கின்றது. இக்கட்டடம் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இங்கிலாந்தின் பேரரசி விக்டோரியாவின் பெயரால் பெயரிடப்பட்ட சிறப்பு வாய்ந்த கட்டடமாகும். மேலும், சென்னை மாநகரின் கட்டடக் கலைக்கு ஒரு எடுத்துக்காட்டாகவும், விக்டோரியா ராணி ஆட்சியின் பொன் விழாவை நினைவு கூறும் வகையிலும் அமைக்கப்பட்ட இக்கட்டடம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. ராபர்ட் சிசோல்ம் என்பவரால் இந்தோ சாரசெனிக் கட்டடக்கலையில் நம்பெருமாள் செட்டியாரால் 1888ஆம் ஆண்டு இந்த அரங்கம் கட்டப்பட்டது.

வரலாற்று சிறப்புமிக்க, தொன்மை வாய்ந்த விக்டோரியா பொது அரங்கினை அதன் தொன்மை மாறாமல் புனரமைத்து, மறுசீரமைக்கும் பணியினை மேற்கொள்ள தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவிட்டு, நிதி ஒதுக்கீடு செய்தார்கள். அதனடிப்படையில், சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், மாநகராட்சி சார்பில் ரூ.32.62 கோடி மதிப்பீட்டில் அதன் தொன்மை மாறாமல் புனரமைத்து, மறுசீரமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இரண்டு தளம் கொண்ட இக்கட்டடத்தின் நீளம் 48 மீட்டர், அகலம் 24 மீட்டர், பிரதானக் கூரையின் உயரம் 19 மீட்டர் மற்றும் மொத்த கோபுரத்தின் உயரம் 34 மீட்டர் ஆகும். தற்பொழுது இந்த விக்டோரியா பொது அரங்கின் முழுக் கட்டடத்தையும் அதன் தொன்மை மாறாமல் பழுது பார்க்கும் பணிகள், நில அதிர்வினை தாங்கும் வகையில் மறுசீரமைப்பு பணிகள், முழு கூரையினையும் மறுசீரமைப்பு செய்யும் பணிகள், வெளிப்புறம் மற்றும் உட்புறம் மரத்தளம் மற்றும் மரப்படிக்கட்டுகளுடன் மறுசீரமைப்பு செய்யும் பணிகள், ஏற்கனவே உள்ள கட்டடத்தை தற்போதைய பயன்பாட்டிற்கு ஏற்றவாறு மேம்படுத்துதல் உள்ளிட்ட மறுசீரமைப்புப் பணிகள் முடிவு பெற்றுள்ளது.

இப்பணிகள் மற்றும் விக்டோரியா பொது அரங்கத்தின் வெளிப்புறங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள பூங்கா மற்றும் இதர பணிகளையும் மேயர் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகள் அனைத்தும் தொன்மை மாறாமல் முடித்திடவும் பொதுமக்கள் மற்றும் மாணவர்களை கவரும் வகையில் பணிகளை சிறப்புடன் மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின்போது, ஆணையாளர் ஜெ. குமரகுருபரன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

தாம்பரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, புனித தோமையார் மலை வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில ஒன்றிய செயலாளர் ஜி.கே.ரவி தலைமையில் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சுனில்மேத்யு வரவேற்புரையில் மாபெரும் இறகு பந்து போட்டி நடைபெற்றது. இதில் கழக தீர்மானக்குழு செயலாளர் மீ.அ.வைத்தியலிங்கம், எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் உபகரணங்கள் வழங்கினர். இந்நிகழ்வில், ஒன்றிய கழக நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள், மற்றும் கழக தோழர்கள் பங்கேற்றனர்.